[1990 மே 12

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது தொடர்பாக திரு. சிங்காரம் அவர்களும் ஒரு அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அவர் பெயரும் இதிலே இணைக்கப்படுகிறது. அதுபோல் நம்முடைய திரு. பொன். விஜயராகவன் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அவர்கள் பெயர்களும் இணைக்கப்படுகின்றன.

(இ) சங்கம் அமைத்துக் கொள்ள உரிமை கோரும் டி.வி.எஸ் தொழிலாளர்களின் கோரிக்கை தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டியது குறித்து.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள மிகப் பெரிய தொழில் நிறுவனங்களான டி.வி.எஸ். நிறுவனங்களில் பணியாற்றக் கூடிய தொழிலாளர்கள் அவர்கள் விரும்பக்கூடிய முறையில் சங்கம் அமைத்துக்கொள்ள மறுக்கின்ற அந்த டி.வி.எஸ். நிர்வாகத்தின் மீது அரசு உரிய நடவடிக்கை எடுத்து தொழிலாளர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி மே மாதம் ஒன்றாம் தேதி முதல் அந்தத் தொழிலாளர்கள் பனகல் பார்க்கிலே உண்ணாவிரதம் இருந்தார்கள். அப்படி உண்ணாவிரதம் இருந்து வந்த தொழிலாளர்களைக் கைது செய்து சிறையில் அடைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. மேற்கொண்டு 10-ஆம் தேதி அன்று காங்கிரஸ்காரர்கள் உண்ணாவிரதம் இருக்கக்கூடிய இடம் அது என்று சொல்லி அவர்களை உண்ணாவிரதம் இருக்கவிடாமல் தடுத்து கைது செய்திருக்கிறார்கள். ஆகவே அது சம்பந்தமாக அவர்கள் நேற்று ஊர்வலமாக வந்து தொழிலாளர் நலத்துறை அமைச்சருக்கு ஒரு மனு அளித்திருக்கிறார்கள். இந்த நிறுவனம் தமிழகத்தில் மிகப் பெரிய தொழில் நிறுவனம்.

10.20 மணி

அதிலே நியாயமாக தாங்கள் விரும்பிய ஒரு சங்கத்தை அமைக்கக் கூடாது என்று தொடர்ந்து அவர்கள் அந்தத் தொழிலாளர்கள் மீது மிகப் பெரிய அளவுக்குப் பழி வாங்க பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். அவர்களை மாநிலம் விட்டு மாநிலம் மாற்றுவது, வேலையை விட்டு நீக்குவது போன்ற நிர்பந்தங்களைச் செய்கிறார்கள். அரசு அவர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும். இரகசிய ஓட்டளிப்பு முறையிலே அவர்கள் விரும்பும் சங்கத்தைத் தேர்ந்தெடுக்கும் ஒரு ஏற்பாட்டுக்கு வழி வகுத்துள்ளார்களா, அதற்குரிய பாதுகாப்பு அளிப்பார்களா என்று அமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1990 மே 12]

மாணபுமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நேற்றைய தினம் ஒரு மணி அளவிலே டி. வி. எஸ். தொழிலாளர்கள் ஒன்பது பேர் கொண்ட குழு என்னைச் சந்தித்து, தங்கள் மனுவைத் தந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அந்தத் தொழிலாளர்களை இடம் விட்டு இடம் மாற்றி, கல்கத்தா, பம்பாய் போன்ற இடங்களுக்கு மாற்றி இருப்பதாகவும், நியாயமான கோரிக்கைகளையும் அவர்கள் நிறைவேற்றித் தரவில்லை என்றும் பல்வேறு கோரிக்கைகளை அளித்திருக்கிறார்கள். உடனடியாகத் தொழிலாளர் நல ஆணையரை அழைத்து, இது பற்றி விசாரிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. விரைவாக இது பற்றி முடிவு செய்யப்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஈ) நீதிபதி இராமமூர்த்தி விசாரணைக் கமிஷன் அறிக்கை தொடர்பான நடவடிக்கைகள் குறித்து.

திரு செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் 6—9—1989 அன்று விசாரணைக் கைதியாக இருந்த கோபி என்னும் இளைஞர் மரணம் குறித்து நான் இதே மன்றத்தில் எழுப்பியபோது மாண்புமிகு முதல்வரவர்கள அந்த மரணம் குறித்து மாவட்ட நீதிபதியாக இருந்த திரு. ஏ. இராமமூர்த்தி அவர்கள் மூலமாக விசாரணை நடத்தி அந்த விசாரணை மூலம் உண்மையைக் கண்டறிய நடவடிக்கை எடுக்கப்படுமென்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பின் அடிப்படையில் நீதிபதி திரு. ஏ. இராமமூர்த்தி அவர்கள் விசாரணை அதிகாரியாக, கமிஷனாக அறிவிக்கப்பட்டு, இன்றைக்கு அவர்களுடைய அறிக்கையும் அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. சமர்ப்பிக்கப்பட்ட அந்த அறிக்கை நேற்றையதினம் நம்முடைய அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது. விசாரணைக் கமிஷன் நடத்திய அந்த ஆய்வுகளில் அவர்கள் சில முடிவுகளைத் தெரிவித்திருக்கிறார்கள்.

ஒன்று திரு. கோபி ரிமாண்டில் 24 மணி நேரத்திற்கும் அதிகமாக, சட்ட விரோதமான முறையில் வைக்கப்பட்டிருக்கிறார் என்றும், அவர் 31-8-1989 அன்றே காவல் துறையினரால் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார் என்றும், 2-ஆம் தேதி தான் அவர் அழைத்துச் செல்லப்பட்டார் என்று காவல் துறையினர் சொல்வது உண்மைக்கு மாறானது என்றும், அவர் சட்ட விரோதமாகக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.